**பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்**

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை கூடுதல் இயக்குநர் (மு.கூ.பொ) , அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள், சென்னை-15**

**முன்னிலை : திருமதி.ஜோ.ம.யமுனாராணிM.Sc.,M.Phil.,PhD.,**

**செ.மு.ந.க.எண். 34509/ நிரு4(3)/2019** **நாள்.22.11.2021**

**பொருள் :-** பணியமைப்பு – சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை இயக்குநரகம், சென்னை -15- திரு.ரா.கருணா, இளநிலை உதவியாளர், - கருணை அடிப்படை பணிநியமனம் – காரிமங்கலம், தருமபுரி மாவட்டம், என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குவது – தொடர்பாக..

**பார்வை :-**

1. மாவட்ட திட்ட அலுவலர், தருமபுரி மாவட்டம், அவர்களின் ந.க.எண்.374/அ1/2019, நாள். .11.2019
2. சமூக நல ஆணையர், சென்னை-15 அவர்களின் செ.மு.ந.க.எண். 25243/நிர்4(3)/2017, நாள்.10.12.2018.
3. அரசாணை (நிலை) எண்.240, சந(ம)சதிது, நாள்.10.10.1996.
4. அரசானை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ1) துறை, நாள்.26.02.2021
5. அரசு கடித எண்.19205/க்யூ.1/2010-2, தொழிலாளர் மற்றம் வேலைவாய்புத் (க்யூ 1) துறை, நாள். 03.08.2010.

**ஆணை:**

பார்வை 4-ல் காணும் அரசாணையில் 02.02.2016 முதல் 31.12.2019 வரையுள்ள காலங்களில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத நிகழ்வுகளில் அத்தகைய பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக பின்வருமாறு வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியார்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு, 12.12.2018 முற்பகல் முதல் தருமபுரி மாவட்டம், காரிமங்கலம், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ரா.கருணா என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்த விதிதளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவை இல்லாததால், தனியரின் பணியினை பணியில் சேர்ந்த நாளான 12.12.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

திரு.ரா.கருணா, இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர்ந்து 3 ஆண்டு கால பணியில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினராக இருப்பார் எனவும் ஆணையிடப்படுகிறது.

மேற்படி, தனியர் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலை உடன் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு : பணிப்பதிவேடு அசல்

ஒம்/-ஜோ.ம.யமுனாராணி
கூடுதல் இயக்குநர்(மு.கூ.பொ)
சந (ம) மஉ துறை

பெறுநர் :-

திரு.ரா.கருணா,
இளநிலை உதவியாளர்,
குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகம்,
காரிமங்கலம், தருமபுரி மாவட்டம்.

நகல்

1.மாவட்ட திட்ட அலுவலர், தருமபுரி மாவட்டம்..
2.குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகம்,
காரிமங்கலம், தருமபுரி மாவட்டம்.
3.இருப்பு கோப்பு / உதிரி

//ஆணைப்படி//

நிருவாக அலுவலர்
சந(ம)மஉ துறை

22/11/21

ந.க.எண் 191/அ1/2021 நாள் - 01.12.2021

ஆணை சார்வு செய்யப்படுகிறது.

2/12/21
மா.தி.அ., திருப்பூர்

பெறுநர்:

திரு. ரா. கருணா
இளநிலை உதவியாளர்
கு.வ.தி.அ., கார்மங்கலம்
திருப்பூர் மாவட்டம்.

02/12/21